1992 மார்ச் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தனபால் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ம. தனபால் : தலைவர் அவர்களே, பாலத்தின், முக்கியத்துவத்தை குறித்து சொல்கிறேன். அது விழக்கூடிய நிலையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு பெரிய பிரச்சினையென்றால் அந்தப் பிரச்சினையாகத் தான் இருக்க முடியும். எனவே, எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழகத்தின் முதல்வர் ஆட்சியில் தான் இது சரிசெய்யப்பட வேண்டுமென்ற நிலையிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. எனவே, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் இந்த ஆண்டில் அல்லது அடுத்த ஆண்டிலாவது அந்தப் பாலம் சரி செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாலத்தை நானும் நேரில் பார்வையிட்டேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் என்னோடு வந்தார்கள். ஏற்கெனவே சொன்னதைப் போல் இந்த அரசுக்கு நிறைய மனம் இருக்கிறது. பல்வேறு திட்டங்கள், பல்வேறு சாலைகள், பல்வேறு பாலங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. ஆனால், இருக்கிற நிதிநிலை நெருக்கடி காரணமாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, வருகிற நிதி யாண்டில் இருக்கிற நிலைமைகளை பரிசீலித்து, அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 169, திரு. வே. பெரியசாமி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

169—

அத்தாணி—அந்தியூர் சாலை அகலப்படுத்துதல்.

*841 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அத்தாணி முதல் அந்தியூர் வழியாக பவானி வரையிலும் உள்ள நெடுஞ்சாலை ரோட்டினை அகலப்படுத்தி தார் சாலையாக மாற்றிட அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அத்தாணி முதல் அந்தியூர் வழியாக பவானி வரையுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த சாலைகள் மிகவும் பழுதடைந்து, கடந்த இரண்டாண்டு காலமாக ஆட்சி செய்தவர்களிடத்தில் நான் பல முறை கேள்விகள் மூலமாகவும், சட்டமன்றத்தில் உரையாற்றிய போதும் எடுத்துச் சொல்லியும், நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால் என்னை புறக்கணித்து விட்டார்கள். என் பகுதியைப் புறக்கணித்துவிட்டார்கள். ஆகவே, கருணை உள்ளம் கொண்ட எங்கள் தாய், நான் வணங்கும் கடவுள் ஆட்சி செய்கின்ற இந்த நேரத்தில், சிறப்பாகப் பணியாற்றுகின்ற பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலை ஏற்கெனவே ஒரு கிலோ மீட்டர் வரை இருவழிப்பாதை கொண்ட தார் சாலையாகும். மற்ற எட்டு கிலோ மீட்டர் ஒருவழிப் பாதை கொண்ட தார் சாலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலே கடந்த 9 மாத காலமாக சாலைப் பணிகளை திறமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிகமாக நிதி ஒதுக்கீடு தந்து, ஏறத்தாழ பல்வேறு தொகுதிகளுக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கோடி ரூபாய்களைத் தந்து, வேலைகள் நடந்து வருவதை. நல்ல உள்ளம் படைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதைப்போல, அந்தியூர் தொகுதியிலும், பல்வேறு சாலைகள் இந்த ஆண்டு எடுக்கப்பட்டு இருக்கின்றன

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, படிப்படியாக இந்த ஐந்து ஆண்டுக் காலத்திற்குள், அனைத்துச் சாலைகளையும் உடனடியாகச் செப்பனிட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையையும், படிப்படியாக நிதி ஆதாரத்திற்கு ஏற்ப எடுத்துக் கொண்டு செயல்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 170. செல்வி பி. நிர்மலா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

170—

மாங்கரைப்பாலம் விரிவுபடுத்துதல்

*2049 செல்வி பி. நிர்மலா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

திண்டுக்கல் பழனி சாலையில், மாங்கரைப்பாலம் குறுகியதாக உள்ளதால் சாலை விபத்து ஏற்படுவதைத் தடுக்க விரைவாகப் பாலத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

செல்வி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த முதலமைச்சராலும் சரி செய்யப்படாததை மக்களின் நல்வாழ்வுக்காக, சர்வசாதாரணமாக சாதித்துக் கொண்டு வரும், எங்கள் அன்புத் தாய், புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், பழனிக்கு, பாத யாத்திரையாகச் செல்லும் பல பக்தர்கள், அந்த ஆக்சிடெண்டில் சாவதாலும், பேருந்துகளில் சில ஆக்சிடெண்டுகள் ஏற்பட்டு, மக்கள் உயிருக்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், அன்புத் தாயின் நல்லாட்சியில் கருணையோடு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்று, அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்ற பதிலைத்தருவாரா, விரைவில் நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS